# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## காணி அபிவிருத்தி (திருத்தம்)

**(464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

மாத்தளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன அவர்களால் 2025 யூலை மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 யூலை மாதம் 04 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

**[28 ஆம் சட்டமூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 14.50** **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

# காணி அபிவிருத்தி (திருத்தம்)

## (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48அ ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ ஆம் பிரிவின் 2(இ) எனும் உட்பிரிவில் உள்ள, ‘‘அவள் அல்லது அவனது திருமணத்தின் மீது” எனும் சொற்கள் நீக்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 48ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆ ஆம் பிரிவின் 1(அ) எனும் உட்பிரிவு நீக்கப்படுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவு அதன் 1 ஆம் உட்பிரிவில், ‘‘தவறுகின்ற” எனும் சொல்லுக்குப் பதிலாக, ‘‘நியாயமான காரணமின்றி தவறுகின்ற” எனும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.